ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1588/18 - 2009 පෙබරවාරි 11 වැනි බදාදා - 2009.02.11

1588/18 ஆம் இலக்கம் - 2009 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை இல. : 29.

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம்

10 (1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, உணவுப் பொருட்களை பொதி செய்யும் பொலித்தீன் மற்றும் குப்பை கூழங்களை சேகரிக்கும் பைகளின் அனைத்து தயாரிப்பாளர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு உணவுப் பொருட்களை பொதி செய்யும் அத்தகைய பொலித்தீன் மற்றும் குப்பை கூழங்களை சேகரிக்கும் பைக்கற்றுக்கள் அல்லது கட்டுக்கள் மீது இடப்படும் லேபலில் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது:-

1. தயாரிப்பாளரின் பெயரும் முகவரியும் ;
2. தயாரிப்பு திகதி ;
3. உற்பத்திப் பொருளின் இனம் ;
4. உற்பத்திப் பொருளின் சராசரி தடிப்பம், மைக்கிறோன்களின் ;
5. தயாரிப்பாளரின் சூழல் பாதுகாப்பு உரிம (ஈபீஎல்) இலக்கம் ;
6. தயாரிப்பாளரின் வியாபார/கம்பனி பதிவிலக்கம் ;
7. உணவு பொதிசெய்யும் பொலித்தீன்களின் அல்லது பொலித்தீன் பைகளின் பரிமாணங்கள் மில்லிமீற்றரில் (mm).

இப்பணிப்புரையின் நோக்கமானது, ‘பொலித்தீன்’ உள்ளடக்குகின்ற பொலிதைலின், பொலிபுறோலைனின், பொலிஸ்ரைறின், பொலிவினையில் குளோரைட்டு, பொலிதைலின் ரெறிப்தலேற் அல்லது ஏனைய ஒத்த மூலப் பொருட்களுக்கும் பொருந்தும்.

இக் கட்டளையானது, 2009, ஓகத்து 15 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2009, பெப்புருவரி 11.

2- 606